www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V12Com

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

# வகுப்பு 12

நேரம் : 3.00 மணி | வணிகவியல் | மதிப்பெண்கள்: 90

## பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **20×1=20**

1) மேலாண்மை என்பது ஒரு ............
அ) கலை ஆ) அறிவியல்
இ) கலை மற்றும் அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

2) ............ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன.
அ) செயலூக்கமளித்தல் ஆ) கட்டுப்படுத்துதல்
இ) திட்டமிடுதல் ஈ) பணியமர்த்துதல்

3) குறியிலக்கு மேலாண்மையானது ............ என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது.
அ) பேராசிரியர் ரெட்டின் ஆ) ஜார்ஜ் ஓடியோர்ன்
இ) ஹென்றி பயோல் ஈ) எப்.டபிள்யூ டெய்லர்

4) ஒரு இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பத்திரம் எத்தனை முறை விற்கப்படலாம்?
அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை
இ) மூன்று முறை ஈ) பல முறை

5) மூலதன சந்தை ............ஐ வழங்குவதில்லை.
அ) குறுகிய கால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள்
இ) சமநிலை நிதி ஈ) நீண்டகால நிதி

6) பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

7) நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர்
அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

8) இந்தியாவில் (SEBI) இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1988 ஆ) 1992 இ) 1995 ஈ) 1998

9) மனிதவளம் என்பது ஒரு ............ சொத்து.
அ) கண்ணுக்குப் புலனாகும் ஆ) கண்ணுக்குப் புலனாகா
இ) நிலையான ஈ) நடப்பு

10) இணையவழி ஆட்சேர்ப்பு என்பது ............ மூலமே சாத்தியம்.
அ) கணிணி ஆ) இணையம் இ) அகன்ற வரிசை ஈ) 4ஜி

11) முதலில் வேலை, அடுத்தது மனிதர் என்பது ஒரு ............ கோட்பாடு.
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

12) ............ ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது.
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

13) பங்கு பரிவர்த்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) களச்சந்தை ஆ) உள்ளூர் சந்தை
இ) பத்திரங்களின் சந்தை ஈ) தேசிய சந்தை

14) சந்தையில் உயர்நிலையில் இருப்பவர் யார்?
அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர்
இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்

15) தூய சில்லறை விற்பனையாளர் ............ என அழைக்கப்படுவர்.
அ) சந்தை உருவாக்குநர்கள் ஆ) நடவடிக்கை தரகர்கள்
இ) வியாபாரிகள் ஈ) முகவர்கள்

16) "நுகர்வோரியல்" எனும் சொல் தோன்றிய ஆண்டு
அ) 1960 ஆ) 1957 இ) 1954 ஈ) 1958

17) பொருட்கள் விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
அ) 1962 ஆ) 1972 இ) 1930 ஈ) 1985

18) முந்தைய பங்குதாரர்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள் ............
அ) ஊக்கப் பங்குகள் ஆ) சாதாரணப் பங்குகள்
இ) உரிமைப் பங்குகள் ஈ) முன்னுரிமைப் பங்குகள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



19) ............ திட்ட அறிக்கையில் துணிகரம் செய்வதற்கான நெறிமுறையை உள்ளடக்கியது.
அ) வங்கியர் ஆ) அரசு
இ) கடன் அளிக்கும் நிறுவனங்கள் ஈ) தொழில் முனைவோர்

20) கீழ் குறிப்பிடப்பட்டவைகளில் எது உற்பத்திக் காரணி?
அ) நிலம் ஆ) உழைப்பு
இ) தொழில்முனை ஈ) மேற்கூறிய அனைத்தும்

## பகுதி - ஆ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**
**(வினா எண் 30 கட்டாய வினா)**

21) மேலாண்மையின் துணைப் பணிகளை பட்டியலிடுக.
22) முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA) என்பது என்ன?
23) இரண்டாம் நிலைச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?
24) ஊக வணிகர்களின் வகைகள் யாவை?
25) பதவி உயர்வு என்றால் என்ன?
26) களச்சந்தை என்றால் என்ன?
27) கலப்படத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
28) தனியார்மயமாக்கல் என்றால் என்ன?
29) வரு நிகழ்வுசார் சரக்கு என்றால் என்ன?
30) கூட்டுப்பங்கு தொழில்முனைவோரின் மற்றொரு பெயர் என்ன?

## பகுதி - இ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 7×3=21**
**(வினா எண் 40 கட்டாய வினா)**

31) டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.
32) தற்போதைய / இருக்கின்ற சரக்கு என்றால் என்ன?
33) புதிய பொருளாதார கொள்கை பற்றி சிறுகுறிப்பு தருக.
34) மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யார்?
35) மேலாண்மைக் கருவிகளை பட்டியலிடுக.
36) இரண்டாம் நிலைச் சந்தை - சிறுகுறிப்பு வரைக.
37) எப்பொழுது மாற்று இயக்குநர்களை நியமிக்கலாம்?
38) மனஅழுத்த நேர்காணல் என்றால் என்ன?
39) இரண்டு வகை கீறல்களின் வரைபடத்தை வரைக.
40) பகராள் சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - ஈ

**எல்லா வினாக்களுக்கும் விடையளி: 7×5=35**

41) அ) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் 5)

42) அ) முதல் நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.

43) அ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

44) அ) ஆட்சேர்ப்பு முறைக்கும் - தேர்ந்தெடுத்தலுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இடையே உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)

45) அ) கடன் பத்திரங்களின் வகைகள் யாவை? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? (ஏதேனும் 5)

46) அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) எல்பிஜி (LPG)-யின் சிறப்பு அம்சங்களை விளக்குக. (ஏதேனும் 5)

47) அ) விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விவரி. **(அல்லது)**
ஆ) பல்வகையான நிறும கூட்டங்களை விளக்குக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com